யுமாஜின் (Umagine) TN 2025

தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு!

சென்னை வர்த்தக மையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன. 10 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் "Umagine TN" தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை தொடங்கி வைத்தார்.

புதுமையான தொழில்நுட்பங்களின் மூலம், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எய்திடும் நோக்கில் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து யுமாஜின் என்ற உலகளாவிய தொழில்நுட்ப நிகழ்வைச் சென்னையில் தமிழ்நாடு அரசு நடத்தி வருகிறது.

2021-2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட கூட்டத் தொடரின் போது யுமாஜின்(UMAGINE) வருடாந்திர தொழில்நுட்ப உச்சி மாநாட்டை சென்னையில் நடத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி இரு முறை Umagine TN மாநாடு 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் வெற்றிகரமாக நடைபெற்றது.

கடந்த வருட Umagine மாநாட்டின் போது 26 பொறியியல் கல்லூரிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. தகவல் தொழில்நுட்பத் துறையில் மாநிலம் அடைந்துள்ள வெற்றியை வெளிப்படுத்தும் வகையில் மகத்தான கண்காட்சியும் அமைக்கப்பட்டு இருந்தது.

அதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டும், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) மூலம் UMAGINE TN 2025 என்னும் தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு சென்னை வர்த்தக மையத்தில் இன்றும் நாளையும் (9.1.2025 மற்றும் 10.1.2025) நடைபெறுகிறது.

சென்னை வர்த்தக மையத்தில் UMAGINE TN 2025 தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, பார்வையிட்டார்.

இந்த Umagine TN 2025 மாநாட்டில், சமமான பொது கொள்கைகள் மற்றும் நிர்வாகம் (Equitable Public Policy And Governance), காலநிலை தாக்கம் மற்றும் நிலைத்தன்மை (Climate Impact And Sustainability), பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழிலாளர் மாற்றம் (Economic Growth And Work Force Transformation) போன்ற முக்கிய பொருண்மைகள் குறித்த விவாதங்கள் நடைபெறவுள்ளன. செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் ஆழ்நிலை தொழில்நுட்பம் (Deep Tech), காலநிலை மாற்றம் (Climate Change), Quantum Computing, தொடக்க சூழல் அமைப்பு (Startup ecosystem), உயிர்ப்பூட்டல், (Animation) காட்சி விளைவு, (Visual Effects) விளையாட்டு, (Gaming) மற்றும் களிப்படக் கதை (Comics), உலகளாவிய திறன் மையங்கள் (Global Capability Centre), திறன் மேம்பாடு (Talent Development) மற்றும் மின் வாகனம் (Electric Vehicle) போன்ற வளர்ந்துவரும் தொழில் நுட்பங்கள் குறித்த விவாதங்கள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் 100க்கும் அதிகமான தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் 10,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில், தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த் மின்னாளுமை இயக்குனர் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை தலைமை நிர்வாக அலுவலர் எம். கோவிந்த ராவ், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) திருமதி பி. ரமண சரஸ்வதி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) மரு. இரா. வைத்தி நாதன், இந்திய தொழில் கூட்டமைப்பின் தென் மண்டல தலைவர் திருமதி நந்தினி, HCL Tech நிறுவன முதன்மை செயல் அலுவலர் விஜயகுமார், HP இந்தியா நிறுவனத் துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி. இப்ஸிதா தாஸ் குப்தா, இந்திய மென் பொருள் தொழில்நுட்ப பூங்கா இயக்குநர் அரவிந்த குமார், பல் வேறு நாடுகளின் தூதரக அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் .பி.மூர்த்தி மதுரை, ஒத்தக்கடை நியாய விலைக் கடையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாடு அரசின் பொங்கல் பரிசு தொகுப்புகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் .மா.சௌ.சங்கீதா, மாவட்டத் துணைச் செயலாளர் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் . சு. சதீஷ்குமார், கழக நிர்வாகிகள் சோமசுந்தரபாண்டியன், அ. பா. ரகுபதி, சிறைச்செல்வன், வடிவேல் முருகன் வக்கீல் கலாநிதி, சசிகுமார், ஒத்தக்கடை சரவணன், மருதுபாண்டி, வீரராகவன் உட்பட பலர் உள்ளனர்.

திருச்சி உச்சிப்பிள்ளையார் கோயிலுக்கு 'லிப்ட்' வசதி!

சட்டப் பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!

சென்னை, ஜன.10-

சட்டப்பேரவையில் நேற்று திருச்சி உச்சிபிள்ளையார் கோயிலுக்கு லிப்ட் வசதி செய்து தரப்படுமா என்று தொகுதி உறுப்பினர் இனிகோ இருதயராஜ் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலளிக்கையில், திருச்சி உச்சிபிள்ளையார் கோயிலுக்கு 'லிப்ட்' வசதி செய்து தரப்படும் என்றார்.

இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :-

முனைவர் இனிகோ இருதயராஜ்: திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதி, மலைக்கோட்டை அய்யனார் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற இந்த திருக்கோயிலானது கடந்த 24-9-2024 அன்று சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் குடமுழுக்கு நடந்து முடிந்தது.

முனைவர் த.இனிகோ இருதயராஜ்: என்னுடைய கோரிக்கையை ஏற்று, தகுந்த நடவடிக்கை எடுத்து, குடமுழுக்கு நடத்திய அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சிராப்பள்ளி (கிழக்கு) சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோயிலிலே ரோப் கார் வசதி செய்து தரப்படும் என்று நமது தேர்தல் அறிக்கையில் கூறியவாறு, திராவிட மாடல் ஆட்சியிலே மிகச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிற அமைச்சர் சேகர்பாபு அவர்களும், நானும் 2023 ஆம் வருடம் திருச்சி மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோயிலை ஆய்வு செய்தோம்.

அப்போது 417 படிக்கட்டுகளையும் அமைச்சர் அவர்கள் விறுவிறு என்று ஏறினார். நான் மெதுமெது என்று மெதுவாக ஏறினேன். எனக்காகவாவது ரோப் கார் வசதி செய்து தரப்படும் என்று சட்டப்பேரவையிலே கூறினார் கள். feasibility ஆய்வு அறிக்கை என்ன சொல்கிறது? ரோப் கார் வசதி செய்து தருவதற்கு சாத்தியமா? அல்லது சாத்தியம் இல்லையா? சாத்தியம் இல்லையென்றால் lift வசதியாவது செய்துதர

வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றேன். அதேபோல் அந்த கோயிலுக்குச் சொந்தமான தெப்பக் குளம் முழுவதும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு தெப்பக் குளம் இருக்கிறதா இல்லையா என்று தெரியாமல் கடைகளும், சாக்கடை கழிவு நீர்களும் மீன்கள் செத்து மிதப்பதால் அந்தப் பகுதியிலே துர்நாற்றம் வீசுகிறது.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகளிடமும் பலமுறை முறையிட்டும் சரிவர நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அறநிலையத் துறைக்குச் சொந்தமான தெப்பக் குளத்தை தூய்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கவும், உச்சி பிள்ளையார் கோயிலுக்கு ரோப் கார் அல்லது lift வசதி செய்து தரவும் ஆக்கிரமிப்பு செய்துள்ள கடைகளை அகற்றி மீண்டும் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான தெப்பக் குளத்தை தூய்மைப்படுத்திட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: அவர்கள் கோரிய அந்த உச்சி பிள்ளையார் திருக்கோயிலுக்கு ரோப் கார் அமைக்க வேண்டுமென்ற ஆர்வம் இந்த திராவிட மாடல் ஆட்சிக்கு இருந்தபோதிலும் ITCOT நிறுவனத்திடம் சாத்தியக்கூறுகள் ஆராய்வதற்காக 2 முறை அவர்களுக்கு உத்தரவிட்டிருந்தோம். அவர்கள் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த வகையில் கீழ், மேல் ஆகிய இரு தளத்தில் நிறுத்தத்திற்குண்டான இடம் இல்லையென்றும் அதேபோல் ticket counter, அலுவலகம் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லையென்றும் அவர்களுடைய அறிக்கை தெரிவித்த பிறகு நானும் துறை சார்ந்த அதிகாரிகளும் 4 முறை ITCOT-னுடைய சிறப்பு அதிகாரிகளோடு சென்று ஆய்வு செய்தோம்.

முழுக்க முழுக்க சாத்தியக் கூறுகள் இல்லையென்று கூறிய பிறகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தவுடன் lift வசதியை செய்துதரச் சொல்லி உத்தரவிட்டிருக்கின்றார். நிச்சயமாக அவர், நாங்கள் அந்த மலைக்குச் சென்றபோது கடினமாக ஏறினார் என்று கூறினார். அடுத்து இந்த ஆண்டு இறுதிக்குள் சுலபாக இறைவனை தரிசனம் செய்கின்ற நல்ல சூழலை உருவாக்கித் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவர் கூறிய அந்த தெப்பக்குளம் என்பது 1947 ஆம் ஆண்டு அந்த மாநகராட்சிக்கு 100 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அந்த மாநகராட்சியில் அவ்வப்போது சேருகின்ற கழிவுநீர் போன்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு தொடர்ந்து மாநகராட்சிக்கு இந்து சமய அறநிலையத் துறை அறிவுறுத்தி வருகின்றது.

இடையிலே சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு பொது நல வழக்கு பதிவு செய்யப்பட்டு இருப்பதால் அந்த பொது நல வழக்கினுடைய இறுதி உத்தரவு பெறப்பட்ட பிறகு அந்த தெப்பக் குளத்தை முழுமையாக சீரமைத்துத் தரப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முனைவர் த.இனிகோ இருதயராஜ்: மீண்டும் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, எனது திருச்சிராப்பள்ளி (கிழக்கு) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காலக்கரை உய்யகொண்டான் கால்வாய் அருகே அமைந்துள்ள இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு மேலான பழமையான கோயில் தற்போது சிதிலமடைந்து காட்சியளிக்கிறது.

1993 ஆம் ஆண்டுக்குப் பிறகு கும்பாபிஷேகம் நடத்தப்படவில்லை என்றும், கோயில் சொத்துகள் மீட்கப்படாமல் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்துள்ளதாகவும் பக்தர்கள் என்னிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர். இந்து சமய அறநிலையத் துறைக்குச் சம்பந்தமான ஆக்கிரமிப்புகளை மீட்டு புனரமைக்கப் படாத கோயில்கள் எல்லாம் புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்தி வருகிற ஆட்சி நமது திராவிட மாடல் ஆட்சி. அமைச்சர் சேகர்பாபு அவர்கள் அந்தத் துறையிலே பதவியேற்றதற்குப் பிறகு தேடித் தேடி சென்று பழமைவாய்ந்த கோயில்களை மிகச் சிறப்பான முறையிலே கும்பாபிஷேகம் நடத்தி வருகிறார்.

அதேபோன்று ஸ்ரீ செல்வ விநாயகர் கோயிலை புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்த வேண்டும். அதேபோன்று சுந்தரதாஸ் தெருவிலே அமைந்துள்ள காசி விஸ்வநாதர் கோயிலிலும், சத்திரம் பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள காமாட்சி அம்மன் திருக்கோயிலும், ஆக இந்த மூன்று திருக்கோயில்களும் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் என்கின்ற நம்பிக்கையோடு அவர்களின் பதிலை தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: அவர் கோரிய செல்வ விநாயகர் திருக்கோயில் என்பது சுமார் 11 திருப்பணிகள் ஒரு கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் தை மாதத்தில் பாலாலயம் செய்யப்படவிருக்கின்றது. அவர் கோரிய மீனாட்சி அம்மன் திருக்கோயிலும், காமாட்சி அம்மன் திருக்கோயிலும் தலா ரூ.10 இலட்சம், ரூ.15 இலட்சம் செலவில் இந்த தை மாதம் அதாவது ஜனவரி மாதம் இறுதிக்குள் பாலாலயம் நடைபெறவிருக்கின்றது என்பதைத் தெரிவித்து, அருமை அண்ணன் நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் அந்தப் பாலாலயம் நிகழ்ச்சியில் மதங்களுக்கு அப்பாற்பட்டு பங்கேற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட விவசாய அணி சார்பில்

வி.லெட்சுமிபுரத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

அமைச்சர் எஸ்.ரகுபதி - டாக்டர் ரகு - அண்ணாமலை - தூத்துக்குடி சரத்பாலா சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜன. 10 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட விவசாய அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் 5.01.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் திருமயம் வடக்கு ஒன்றியம் வி.லெட்சுமிபுரத்தில் நடைபெற்றது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட விவசாய அமைப்பாளர் இரா.சிவகுமார் வரவேற்புரையாற்றினார்.

திருமயம் வடக்கு ஒன்றியச் செயலாளர் இரா. கணேசன், திருமயம் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆறு.சிதம்பரம் ஆகியோர் தலைமை தாங்கினார்கள்.

மாநில மருத்துவர் அணி அணி துணைச் செயலாளர் டாக்டர் ரகு, அண்ணாமலை, மாவட்ட விவசாய அணி தலைவர் பி. அழகப்பன், மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் க.பரமசிவம், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.வடிவேலு, ஆர். நிறைவு அண்ணா, சோ. தமிழ்ச்செல்வன், சி.முத்துச்சாமி, எஸ்.கே.ஆர்.ராஜேந்திரன், எஸ்.கே.சின்னத்தம்பி, பாலு, ராஜீவ் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமைக் கழகப் பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா, ஆலங்குடி செல்வராஜ், இளம் பேச்சாளர்கள் பிரதீபா, சிவசக்தி ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

இந்நிகழ்வுகளில் திருவரங்குளம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அரு.வடிவேல், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இரா. மேகநாதன், கே. ஆர்.ராமசாமி, எஸ்.எம்.குமரேசன், துணை அமைப்பாளர்கள் அருண் சேகர், சரவணன், எஸ்.நவமணி, வேங்கி அரசன், எஸ்.பாலசுப்பிரமணியன், ஏ.எல்.முத்து, பி.எல். சண்முகம், அழ. மணிவாசகம், பி.எல். கரிகாலன், சுப. துரைராஜா, டாக்டர் ராஜசேகர பாண்டியன், முல்லை ரமேஷ், அய்யாச்சாமி, கா. பொற்செல்வன், ஏ.செந்தில்குமார், ஏ.வி.எம்.வெள்ளைச்சாமி, கே.ஆர்.மாணிக்கம், எஸ். சோமையா, ஏ. பழனிவேலு, எஸ்.சபரிராஜன், எஸ்.சுதாகர், ஜெ.அழகுச் செல்வி, ஜெ.ஜான் பீட்டர், சாமி. சுரேஷ், சே.இராஜமாணிக்கம், ஆர்.அண்ணாத்துரை, வி.கண்ணன், கா.சுப்பிரமணியன், ஆ. ராமசாமி, சாந்தி பொன்னையா மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கா. சுரேஷ் நன்றி கூறினார்.

கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

திருப்பதியில் கூட்ட நெரிசலில் சிக்கி

உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்!

காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற முதல்வர் மு.க.ஸ்டாலின் விழைவு!

சென்னை, ஜன. 10-

திருப்பதியில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் காயமடைந்தவர்கள் விரைந்து நலம் பெற வேண்டியும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு:-

திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட அப்பாவி உயிர்கள் பலியாகியுள்ள துயர நிகழ்வை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

இந்தச் சோகச் சம்பவத்தில் உற்றாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் மீது ரஷியா ஏவுகணை தாக்குதல்!

13 பேர் பலி!

கீவ், ஜன. 10 -

உக்ரைன், ரஷியா இடையே 1,050வது நாளாக போர் நடைபெற்று வருகிறது.

இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

போரை நிறுத்த பல்வேறு நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

போர் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் இரு நாடுகளும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், உக்ரைனின் ஐபோரிஜ்ஜியா மாகாணத்தில் ரஷியா நேற்று முன்தினம் ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

இந்த ஏவுகணை தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர். மேலும், 30 படுகாயமடைந்துள்ளனர்.

திருப்புவனம் பேரூராட்சி பகுதி பழையூர். கோட்டை. இந்திராநகர். புதூர். மற்றும் டி.அதிகரை ஆகிய நியாயவிலைக் கடைகளில் தமிழக அரசின் இலவச பொங்கல் தொகுப்புகளை திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர். த.சேங்கைமாறன் குடும்ப அட்டை தாரர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வட்ட வழங்கல் அலுவலர் சுந்தரி, கூட்டுறவு செயலாச்சியர் ராஜலட்சுமி, கள அலுவலர் யோகேஷ், நகர செயலாளர் நாகூர்கனி, பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் வேல்பாண்டி, சித்ரா, ஆறுமுகம், கண்ணன், பாலகிருஷ்ணன், ராமலட்சுமி, பாலகிருஷ்ணன், மாரிதாசன், கமிலாபானு, சேக்முகமது, மாவட்ட விவசாய துணைத் தலைவர் சேகர். மாவட்ட பிரதி நிதி சுப்பையா, மீனாட்சி சுந்தரம், மகேந்திரன், தொண்டரணி ராஜா, தேளிகோபால், மீனவரணி அண்ணாமலை, சங்க செயலாளர்கள் ரமேஷ், துரை மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

தமிழக ஆளுநரைக் கண்டித்து

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம்!

டி.செங்குட்டுவன் — இ.ஜி.சுகவனம் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஜன. 10 -

தமிழக ஆளுநர் ரவி சட்டமன்ற கூட்டத்தொடர் துவக்க நாள் உரையை புறக்கணித்து சட்டமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்ததை கண்டித்தும், தொடர்ந்து தமிழக முன்னேற்றத்திற்கு தடையாக இருந்து வரும் தமிழக ஆளுநர் ரவியை கண்டித்தும், ஒன்றிய பாசிச பாஜக அரசை கண்டித்தும், இவர்களுக்கு துணை போய்க் கொண்டிருக்கும் அதிமுக வினரை கண்டித்தும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கவர்னரை வெளியேறும் படி கண்டனம் முழக் கங்களை எழுப்பினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதிநாராயணசாமி, மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப் , செந்தில், கிருபாகரன் பொதுக் குழு உறுப்பினர்கள் அஸ்லாம், பாலன், நாகராசன், கோதண்டன், சித்ரா சந்திரசேகர் , கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, அறிஞர், ராஜேந்திரன், நரசிம்மன், குணவசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், குமரேசன், பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை ,வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழகமூத்த முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஆளுநருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள்.

தென்காசி வீட்டு வசதி வாரியத்தில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நியாயவிலைக் கடையில் நேற்று (090125) குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் ஆகியோர் வழங்கினர். உடன் தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர், ஒன்றியக் குழு தலைவர் சேக் அப்துல்லா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அனிதா,துணைப் பதிவாளர்கள் பூர்விகா, கோபிநாத் உள்பட பலர் உள்ளனர்.